


யாழ்ப்பாணம் பலாலியை பிறப்பிடமாகவும்,
வவுனியா கற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.

# சிவஸ்ரீ. இரத்தினசாமிக் குருக்கள் பாலச்சந்திரக் குருக்கள்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவேந்தல் மலர்

## 13.11.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பலாலியைப் பிறப்பிடமாகவும்

வவுனியா கற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

**சிவஸ்ரீ.இரதினசாமிக்குருக்கள் பாலச்சந்திரக்குருக்கள்**

**அவர்களின்**

**சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற**

# நினைவுமலர்

# 13.11.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எமையெல்லாம் பெற்றுவளர்த்து
உணவூட்டி, சீராட்டி, கல்வி தந்து
ஒளிமயமான எதிர்காலத்தைக்
காட்டி, அணைந்தும் அணையாத
சுடராக எமது இதயங்களில்
சுடர்விட்டுக் கொண்டிருக்கும்
தந்தையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனின்
பாதார விந்தங்களை மலர்க் கொண்டு
அர்ச்சித்து உங்கள் பாதக்
கமலங்களுக்கு இந்நினைவு
அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

**குடும்பத்தினர்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட
கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்கள்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்


இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின் கீழிருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு
03
.
01
.
1946

உதிர்வு
13
.
11
.
2017

யாழ்ப்பாணம் பலாலியைப் பிறப்பிடமாகவும்
வவுனியா கற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.

# சிவஸ்ரீ.இரத்தினசாமிக்குருக்கள் பாலச்சந்திரக்குருக்கள்

## திதி நிர்ணய வெண்பா

சீர் மேவுயர் ஹேவிளம்பி தனிலே
ஐப்பசித் திங்களாம் தேய்பிறை ஏகாதசி தனிலே
பேராளன் முருகனவன் திருப்பாதம் தான் விரும்பி
பாலச்சந்திரக் குருவும் சென்றதனை யான் நாளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
　　ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
　　குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
　　வள்ளியை மணம்புணர வந்த முக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
　　ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.

## சிவஸ்ரீ.இரத்தினசாமிக்குருக்கள் பாலச்சந்திரக்குருக்கள்

# அவர்களின் வாழ்க்கை வரலாறு

இலங்கையின் வடபால் தோட்ட நிலங்களுக்கு பெயர் போன பலாலியிலே பெரும் மதிப்பினையும் இறை தொண்டினை செவ்வனே செய்கின்றதும் ஜோதிடத்தில் மக்களது சந்தேகங்களை தீர்ப்பதும் அவர்களுக்கு ஆனவற்றை செய்வதும் என்று அந்தண குலத்திற்கே உரிய சேவை மனப்பாங்குடன் வாழ்ந்து வந்தவர்கள் இரத்தினசாமிக்குருக்களும் அவர் பாரியார் சாரதாம்பாளும் இவர்களின் நல்லறத்தின் பயனாக மூன்று மழலைச் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர். அவர்களில் மூத்த குழந்தை பெண் குழந்தையாகவும் அவருக்கு பரமேஸ்வரி அம்மா எனப்பெயரிட்டும் அடுத்த இருவருமே ஆண் குழந்தையாகையினால் மூத்தவர் வைத்தியநாதக் குருக்களாகவும் அடுத்தவர் இளையவர் எம் அன்புக்குரிய பாலச்சந்திரக் குருக்கள். இளையவனுக்கே உரிய அரவணைப்பில் வாழத்தொடங்கினார்.

1946ம் ஆண்டு தைமாதம் 3ம் திகதி பிறந்தார். பருவத்தே பயிர் செய்ய தவறவில்லை. ஆரம்பப் பள்ளியை பலாலி சித்தி விநாயகரிலும் இடை நிலைக் கல்வியினை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், வயாவிளான் மகா வித்தியாலயத்திலும் கற்றுத் தேர்ந்தார். விவசாயத்தில் அதீத விருப்பத்தினைக் கொண்டிருந்தார்.

இவ்வாறு இவருடைய காலம் உருண்டோடிய போது அவர் வவுனியா மண்ணுக்கு வந்தது காலத்தின் தேவையே. சொந்த அலுவல் காரணமாகத் தமையனார் புத்தளம் செல்லும் போது புகைவண்டியில் பலாலியைச் சேர்ந்த வன இலாகாவில் பணிபுரிந்த கதிரவேற்பிள்ளையும் கூட பயணித்தார். அப்போது இவர்கள் இருவரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் தான் ஓர் ஆசாரி என்றும் தனது பெயர் நடராஜா என்றும் தங்கள் வவுனியாவில் கோவில் குளத்தை சேர்ந்த ஒரு குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையான ஒரு முருகன் கோவிலை நடாத்தி வருவதாகவும் தாங்களும் அவர்களுடன் கூட இருந்து உதவிகள் செய்வதாகவும் தங்களுக்கு ஒரு ஐயா தேவை அதனால் தாங்கள் வந்து சேவை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதற்கமைய வீடு சென்று அனைவரோடும் ஆலோசித்து 1961ம் ஆண்டு வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவிலை வைத்தியநாதக் குருக்கள் பொறுப்பேற்றார். அப்போது அவருக்குப் 18 வயது. 1964ம் ஆண்டு வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச வேலை கிடைத்து விட உதவி தேவைப்பட அவரின் தம்பியார் பாலச்சந்திரக்குருக்கள் வவுனியா வருகின்றார். 1966 இருவரும் சேர்ந்து ஆலயத்தை வளர்க்க ஆரம்பித்தனர். அந்தக் காலகட்டத்தில் வவுனியாவில் ஐயா,அவர் அண்ணர், குடியிருப்பு ஐயா இந்த மூன்று குடும்பங்களைத் தவிர பிராமணக் குடும்பங்கள் யாரும் இருக்கவில்லை.

அத்தோடு 2ம் குறுக்குத் தெருவில் 1963ம் அண்ணன் வாங்கிய காணி இருந்தது. அதில் ஒரு சூலம் வெயில்,மழையில் அனாதரவாகக் காணப்பட்டதும் அவர் கண்ணுற்றார். எனவே அதனை இப்போது இருக்கும் ஆலமரத்தின் கீழே அண்ணர் அவர்கள் கொண்டு வந்து ஸ்தாபித்து விட அதற்கு ஞானவைரவர் எனப் பெயர் சூட்டி சிறிய கொட்டில் அமைத்து அதற்கும் பூஜை செய்து வந்தார். சிறந்த முருக பக்தனாகவும் மக்கள் சேவகனாகவும் மிளிர்ந்தார். ஸ்ரீ கந்த சுவாமி கோவிலின் மூன்று பெருங் கும்பாபிஷேங்களைக் கண்ட சிறப்புக்குரியவர். அது போல் ஞான வைரவர் கோவிலையும் 300 சதுர அடி அளவில் கல்லாலான கொட்டகையுடன் சிறிய தூபியுடனும் வழிப் போக்கர்கள் அயவர், வழிபடுவோர் உதவியுடன் மேற்கு நோக்கி அமைத்து 1980 ல் சோமாஸ்கந்த குருக்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். இதனாலே முருகன் கோவில் அடியவர்களும் இங்கு வந்து வழிபாடியற்றினார். மீண்டும் 1981 ம் ஆண்டு அண்ணர் மீண்டும் வவுனியா வந்தவுடன் வைரவர் ஆலயத்தை அவர் பொறுப்பிலே விட்டுவிட்டார். அத்தோடு முற்று முழுதாக முருகனுடன் ஐக்கியமானார். 1970ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ம் திகதி தனது திருமண பந்தத்திலே இணைகின்றார். ஈழத்துச் சிதம்பரத்தில் சிவத் தொண்டாற்றிக் கொண்டிருந்த கணேசக் குருக்கள் வாலாம்பிகை தம்பதிகளின் சீமந்த புத்திரியான பால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரேஸ்வரியினைக் கைப்பிடித்தார். இதன் விளைவினால் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் அழகிய பெண் குழந்தையினை கண்டு பாலகௌரி எனப் பெயர் சூட்டி தன் வாழ்வின் ஆதாரத்தைத் தேடிக் கொண்டார்.

ஆரம்பக் கல்வி முதல் அனைத்துச் சிறப்புக்களையும் அவருக்கு ஊட்டி பருவகாலத்தில் அவரது அக்காவின் மகனான பிரகதீஸ்வர சர்மாவை (மச்சானை) பேசி முடித்து திருமணத்தையும் செய்து கொடுத்து அந்த இன்பத்தினையும் கண்ணாரக் கண்டு மகிழ்கின்றார். இதனால் ஹரீஸ், ஹர்ஷித் என்ற இரு பேரன்களைக் கண்டு ஆனந்தமடைகிறார். ஜாதகப் பணியில் தனக்கென ஒரு மக்கள் கூட்டத்தை வைத்திருந்தவர். அவரால் பல சுபகாரியங்கள் செய்யப்பட்டும் நிறை வேற்றப்பட்டும் இருந்தது அவருக்கு மன நிறைவினைக் கொடுத்தது. சிறந்த ஓர் விவசாயியாகவும் தன்னை மாற்றிக் கொண்டார். தோட்டத்தில் தன்னை அர்பணித்து விவசாயத்திலும் தன்னிறைவு கண்டவர்.

ஒரு சில உபாதையினால் நோய்வாய்ப் பட்டாலும் மனந்தளராது தம் பணியினைச் செய்தவர். உடல் சோர்ந்த போதும் மனம் சோராதவர். கடந்த வருடம் கூட தனக்கென முருகன் கோவிலில் இருந்த அறையினை ஆலயத்திற்கு எழுதிக் கொடுத்தார். இவ்வாறாக பல அரும்பணிகளைச் செய்தவர் மூன்று மாதங்களின் முன்னர் தனது மகள் மருமகன் பேரக்குழந்தைகளுடன் சென்று வாழ்ந்தார். என்ன நினைத்தாரோ தெரியவில்லை மகள் மருமகன் அனைவரும் தடுத்த போதும் கேட்காது மீண்டும் வவுனியா வந்து தனது பணிகளைத் தொடர்ந்தார். கடந்த 11.11.2017 அன்று கடுஞ் சுகவீனம் காரணமாக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 13.11.2017 திங்கள் இரவு 11.10 மணியளவில் தனது சேவைகளை முடித்து வாழ்ந்தது போதும் என்று இவ்வுலக வாழ்வில் இருந்து நீங்கித் தனது ஜென்மச் சங்கிலியை தொடர அனைவரும் தவித்திருக்க இறைவனோடு ஒன்றிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பியவை

1. ஆனதுணை என்று நானும் ஆசையோடு கரம்பற்றி
 ஆண்டுகள் பல அகமிக மகிழ்ந்திருந்தேன்.
தேனான வாழ்க்கையோடு தெவிட்டாத இன்பங்கள்
 தானாகவே வந்ததென்று பெருமை கொண்டேன்
காணாத செல்வமெல்லாம் கண்டுயர் வேனென்று
 காரிகை நான் கனவு கண்டேன் ஐயா
வீணாகப் போகுமென்று கனவிலும் எண்ணவில்லை.
 வாழ்நாள் எல்லாமுனை நினைந்தழலாச்சே.

2. மஞ்சளும் குங்குமமும் நானிழந்தேன் ஐயா
 மங்கள தாலியும் கழற்றி வைத்தேன், அந்தோ
கொஞ்சும் பூவும் பொட்டும் இழந்தேன் - இன்று
 கொடும்பாவியாகி குளறி அழுகின்றேன்.
பஞ்சுபோன்ற மனம் படைத்த எந்தன் பதியே
 பாவியெனை பரிதவிக்கவிட்டு சென்றதேனோ!
அஞ்சும் அறிவும் கெட்டு ஆறாத் துயரால்
 அறிவிழந்து அழுது புலம்புகின்றேன் ஐயா!

## மகள்
## பிரிவாற்றாது சிந்திய கண்ணீர்

பெற்றெடுத்த பெரும் பேறாகவே எண்ணியெனை
 பேணி வளர்த்த என்னருமைத் தந்தையே
வற்றாப் பாசமழை சொரிந்து பற்றுடனே யென்னை
 வளமுடன் வளர்த்தெடுத்த எங்களையா
பற்றான கணவரையும் தேடித் தந்தெங்கள்
 பக்க துணையாய் இருந்த போதெல்லாம்
பெற்றேனே பேரின்பம்! ஐயா வின்று பெருந்துயர்
 பற்றியெமை பதறியழ வைத்ததே ஐயா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் மாமனார்
## பிரிவாற்றாது புலம்பியவை

பாசத்தால் பற்றுடை மகன்போல் என்னையும்
பரிந்து போற்றிட உத்தமரே எங்கள்
நேசத்தால் நெஞ்சம் நிறைந்த நினைவெல்லாம்
நீதி மொழியாகவே எமக்கெடுத்து ரைப்பீர்
தோசத்தால் துயர்துன்பப் பட்டாலும் அதனை
துடைத்தெறிய பரிகாரம் பகிர்ந்திடுவீர்
தேசத்தில் உம்போல் ஒருபிறவி இல்லை என்றிருக்கையில்
தெரிந்தெடுத்தானோ யந்த தென்திசைப் பாவி!

## பேரர்
## நினைந்து புலம்பியவை

அல்லும் பகலும் அம்மப்பா, அம்மப்பா வென்றே
ஆசையோடு ஓடி வருவோமே
சொல்லுமினிய வார்த்தையால் உள மகிழ வைத்து
செல்லும் வழியெல்லாம் சொல்லிடுவாய்
செல்வங்கள் நாமென்று அள்ளி அணைத்து நாம்
சொல்லும் பொருளெல்லாம் வாங்கித் தருவாய்
உள்ளத்தால் வள்ளலான எங்கள் அம்மப்பாவே
உறைவிடம் விட்டின்று மறைவிட மானதெங்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் அகவல்

-ஔவையார்-

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பிக சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசைபாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதல் ஐந்து எழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்து என் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்து எனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்து அறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டு எழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கு அருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கங் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக் அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடும் மெய்தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்,
தத்துவ நிலையைத் தந்து என்னை ஆண்ட
வித்தக! விநாயகா! விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தசஷ்டி கவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள்
கந்தர் சஷ்டிகவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

ச'டியை நோக்கச் சரவண பவனார்
சி'டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணபக வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் நிந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனிய வேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காரக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா ணாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொலவும் இடிவிழுந் தோடிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரலணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாக
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழிப் பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றதுநீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோ ரடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றா ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றென துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

1. பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

2. ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப்பெற்ற
தாயாரை வைவார் கதி ஆயிரஞ்ச செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொள்ளும்
ஈயார் இருந்தென்ன போயென்ன கச்சியேகம்பனே.

3. சொல்லாமல் கொன்றைத் தின்னாமல் சூத்திரங்கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவிலும் பொய்
சொல்லாமலல் சொற்களைக் கேளாமல் தோகையர் மாயையிலே
சொல்லாமல் செல்வந்தருள்வாய் சிதம்பர தேசிகனே.

4. முடிநார்ந்த மன்னம் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதெல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்த நாம் உய்யவேண்டுமன்றே அறிவாரில்லையே

5. பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருண்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிருனமே அது காண்நல் மருந்துனக்கே.

6. ஐயும் தொடர்நது விழயுஞ்செருகி அறிவழந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்றும் வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றியூர் உடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே

7. பொன்னால் பிரயோசனம் பொன்படைத்தாரங்குண்டு பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டு அத்தன்மையைப்போல்
உன்னால் பிரயோசனத் வேணதெல்லர் உண்டு உன்னைப் பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தி யீச்சரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வருந்தேன் பிறந்தும் இறந்தும் மயங்கும் புலன்வழிப் போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றிலேன் புகழ்வாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயல் அஞ்செழுத்தாம்
அரும்தேன் அருந்துவன் நின் அருளால் கியலாயத்தானே

9. கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கம் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச்செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்தமானுடமே.

10. மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டோம் இனிக்கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண்டுள்ளே எழுந்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையுமண்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்துரு காரியங்களின் முக்கியத்துவம்

நாம் இறந்தவர்களுக்குச் செய்யும் காரியங்களைச் சிரார்த்தம் என்று கூறுகின்றோம். நடை முறை வழக்கில் சொல்வதாயின் திவசம் செய்தல்,தர்ப்பணங்கள் செய்தல். பிதிர் காரியங்களைச் செய்யும் போது சிரத்தையுடன் செய்ய வேண்டும். குறுக்கிச் செய்தல்,சுருக்கிச் செய்தல் திதிகளை தவற விடுதல் தவறாகும். இவை ஒழுங்கு முறையில் நடக்கும் போது அதனுடைய பலனும் நமக்குப் பிரத்தியட்சமாகத் தெரியும். இதனை மடத்தனமோ அல்லது வீண் என யாராவது நினைத்தால் அதனுடைய விளைவுகளையும் அவர்களே ஏற்க வேண்டும்.

ஒழுங்கு முறையாக சிரார்த்தம் செய்யாதவர்கள் வீடுகள் சித்தப் பிரமை பிடித்தது போலவும்.தோல் வியாதிகள்,நரம்பு வியாதிகள், போன்ற தன்மைகள் ஏற்படும். தேவையில்லாமல் மாந்திரீகர்களையும், சாத்திரிகளையும், ஜோதிடர்களையும் தேடித் தேடி அலைவார்கள். சிலர் குழந்தைப் பாக்கியம் அற்றவர்களாகவும், புத்திர சோகங்களை உடையவர்களாகவும் காணப்படுவர். இதற்கான ஒரே தீர்வு பிதிர் காரியங்களை ஒழுங்காகச் செய்வதே.

மாதா பிதா உயிருடன் இருக்கும் போது செய்யும் செயல்கள் மக்களைக் காக்கும் என்றால் அவர்களின் காலத்தின் பின்பு மக்கள் அவர்களுக்குச் செய்வதை நிறுத்தினால் அது காவலாக அமையாது பாதகமாகவே அமைந்துவிடும். பித்துரக்கள் எங்கே சபிக்கப் போகின்றார்கள் என்று ஏளனமாக விடுதல் தவறு. சாபங்களிலே பித்துரு சாபம் பொல்லாதது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றது. முன்னோர்களுக்கு எள்ளும் நீரும் இறைப்பதும், தர்ப்பணங்கள் பண்ணுவதும் தான தர்மங்களைச் செய்வதும் முன்னோர்களை மகிழ்விக்கும்.

இதனால் நிம்மதியும், அமைதியும், சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கும். நம் பின் சந்ததியினருக்கு நிறைவான வாழ்வும் கிடைக்கும். நாங்கள் தர்ப்பணங்களைச் செய்கின்ற போது பூலோகமல்லாது எந்தெந்த உலகங்களின் பித்துருக்கள் இருக்கின்றனவோ அந்தந்த உலகங்களிற்கு நாம் செய்கின்ற தர்பணங்கள் அவர்களுக்குரிய ஆகாரமாக மாறி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமடைந்த எல்லோரும் உடனே அனைவரும் பிறப்புகளை எடுப்பதில்லை. ஒவ்வொருவரும் செய்து கொண்ட பாவ புண்ணிய கணக்கிற்கேற்ப அடுத்த ஜெனனத்திற்கான நாட்கள் எண்ணப்படும். புண்ணியம் செய்த ஆன்மாக்கள் அதன் பலனால் உயர் பிறவிகளையும்,பாவப்பட்ட ஆன்மாக்கள் அதன் விளைவினால் பாவப்பட்ட பிறவிகளையும் எடுக்கும். பாவிகள் நரகத்திலே உழலவேண்டும். நீண்ட காலத்தின் பின்னர் கஷ்டங்கள் நிறைந்த இடங்களில் பிறக்க நேரிடும். நித்திய சுவர்க்கமே ஆன்ம விடுதலை.

ஹநரக லோக ஆன்மாக்களுக்கு இந்த தர்ப்பணம், திவசங்களால் பலன் கிடையாது. சொர்க்கத்திலும் நரகத்திலும் பல தினுசு உலகங்கள் காணப்படுகின்றன. தேவலோகம்,கந்தர்வ லோகம், வித்யாதரலோகம், பிரம்ம லோகம்,விஷ்ணு லோகம், சிவ லோகம், சத்யலோகம் என்பன சுவர்க்க லோகங்களாகவும் தாமிஷ்டம்,அந்த தாமிஷ்டம்,புத்,ரௌரவம் என்று பாவ லோகங்களும் உண்டு. ஒவ்வொருவரின் வினைப்பயனும் ஒவ்வொரு லோகங்களைக் கொண்டு போய் சேர்க்கும்.

பாவப்பட்ட ஆன்மாக்களுக்கு சுத்தமா பொருட்களைச் சேர்க்க முடியாது. அவை புண்ணியாத்மாக்களுக்குரியது. இதனாலே ரிஷிகளும் முனிவர்களும் அந்த ஆத்மாக்களை திருப்திப்படுத்த சில வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். திதி காலங்களில் கை கழுவும் நீர்,தலை முழுகும் போது சிகை வழியாக வழியும் நீர் ஆடை வழியாக சிந்தும் நீரினை வலக்கையினால் விடுவதால் அவை பாவப்பட்ட ஆன்மாக்களைச் சென்றடைகிறது.

அழுக்கானவற்றினை பிதிர்களுக்கு கொடுப்பதா என தவறாக கருதக் கூடாது. எதுவுமின்றி அந்தரித்துத் திரிகின்ற பாவப்பட்ட ஆன்மாக்கள் தங்கள் நிலைக்கேற்ற போல் இவற்றை ஏற்று அமைதியாகின்றது. செய்யும்போது அன்போடும் கருணையோடும் செய்வதனால் அவை இவற்றை ஆகாரமாக்கி மெல்ல மெல்ல சுகம் பெறுகிறது. இதனால் மாபாவிகளுக்கு கூட இதனால் நற்கதியேற்படும். இவ்வாறாக பித்துருக்களினால் நற்கதி அடையலாம். திதி தவற விட்டால் கூட ஆடி அமாவாசை, சித்திரை பௌர்ணமி, மஹாளய பட்சங்கள் என்பனவற்றில் செய்து கொள்ளலாம். எனவே பித்துரு வழிபாட்டின் ஊடாக எம் சந்ததியினர் நற்பலன்களைப் பெறலாம்.

(வேதியன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிய வேண்டிய தகவல்கள்

பஞ்சாங்கம் எனப்படுவது நாள், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் இவை ஐந்தையும் குறிப்பிடுவது ஆகும்.

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | - | சூரியனுக்கும் |
| திங்கட்கிழமை | - | சந்திரனுக்கும் |
| செவ்வாய்க்கிழமை | - | அங்காரகனுக்கும் |
| புதன்கிழமை | - | புதனுக்கம் |
| வியாழக்கிழமை | - | குருவுக்கும் |
| வெள்ளிக்கிழமை | - | சுக்கிரனுக்கும் |
| சனிக்கிழமை | - | சனீஸ்வரனுக்கம் |

ராகு கேதுத இரண்டும் நிழல் கிரகங்கள் ஆகையினால் அவர்களுக்கு உருவம் கிடையாது.

### காலங்கள்

| | | |
|---|---|---|
| வசந்த காலம் | - சித்திரை, வைகாசி | - இளவேனிற்காலம் |
| கிரீஷ்ம காலம் | - ஆனி,ஆடி | - முதுவேனிற்காலம் |
| வருஷ ருது | - ஆவணி,புரட்டாதி | - கார்காலம் |
| சரத் ருது | - ஐப்பசி,கார்த்திகை | - கூதிர்காலம் |
| ஹேமந்த ருது | - மார்கழி,தை | - முன்பனிக் காலம் |
| சிசிர ருது | - பின்பனிக் காலம் | |

### உத்தராயணம்

தமிழுக்கு தை மாதம் தொடங்கி தமிழ் ஆனிமாதம் முடிகின்ற வரையுள்ள காலப் பகுதி உத்தராயண காலம் என்றழைக்கப்படும். சூரியன் தெற்கில் இருந்து வட திசை நோக்கிச் செல்கின்ற காலமாகும். தேவ லோக ஒரு பகல் பொழுது காலமாகும். மிகப் புண்ணிய காலமாகும். இப்பகுதியில் இறக்கும் ஜீவன்களுக்கு நற்கதி என்று கூறப்படுகிறது.

### தட்சணாயனம்

தமிழ் ஆடி பிறப்பு முதலாக மார்கழி மாதம் முடிகின்ற வரையுள்ள காலப் பகுதி தட்ஷணாயன காலமாகும். சூரியன் வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையில் இருந்து தென் திசை நோக்கி தனது பயணத்தினைத் தொடங்கும் காலம். தேவர்களின் ஒரு இராப் பொழுது காலம்.

**ராசிகள் 12**

மேடம், இடபம், மிதுனம், கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ,மீனம்

**நட்சத்திரம் 27**

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அத்தம், சித் திரை, சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி.

ஒன்பது நவக்கிரகங்களும் இந்த நட்சத்திர வாரியாக 12 இராசிகளிலும் பயணம் செய்வர். ராகுவம் கேதுவும் தவிர்ந்த அனைத்து கிரகங்களும் ராசிச் சக்கரத்தில் இடமிருந்து வலமாகவும் ராகுவும் கேதுவும் வலமிருந்து இடமாகவும் சுற்றுவார்கள். ராகுவிற்கு 7ம் வீட்டிலே எப்போதும் 180 பாகை தூரத்தில் கேது இருப்பார்.

**ஒவ்வொரு ராசியினையும் கடக்க எடுக்கும் காலங்கள்**

| | |
|---|---|
| சூரியன் | - 1 மாதம் |
| சந்திரன் | - 2 1/4 நாள் |
| செவ்வாய் | - 1 1/2 மாதம் |
| புதன் | - 1 மாதம் |
| வியாழன் | - 1 வருடம் |
| சுக்கிரன் | - 1மாதம் |
| ராகு | - 1 ½ வருடம் |
| கேது | - 1 1/2 வருடம் |

சூரியன் சித்திரை முதலாம் நாள் கால புருஷனுடைய முதல் ராசியான மேடத்திலே பிரவேசிப்பார். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியாக கடந்து பங்குனி முதுல் தேதியன்று மீனராசியில் பிரவேசிப்பார். இவ்வாறாக 12 ராசிகளினையும் கடந்து விடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜாமம்**

2 மணித்தியாலம் 24 நிமிடம் கொண்டது ஒரு ஜாமம் என அழைக்கப்படும். ஒரு நாளைக்கு 10 ஜாமங்கள் ஆறு நாளிகைகள் கொண்டது ஒரு ஜாமம். 60 நாளிகை கொண்டது பகல் இரவு கலந்த ஒரு முழு தினமாகும்.

**ஹோரை**

தினசரி ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு ஹோரைப் படி சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, குரு, செவ்வாய் என ஏழு ஹோரைகள் உண்டு. தினசரி அன்றைக்கு என்ன கிழமையோ அந்தக் கிழமைக்குரிய ஹோரைதான் முதலில் வரும். இதில் வியாழன், புதன், சுக்கிரன், வளர் பிறையில் சந்திரன் ஹோரைகளில் சுப காரியங்கள் செய்ய உத்தமம்.

**ராகு காலம்**

ஞாயிறு - மாலை 4.30 தொடக்கம் 6.00 மணி வரை
திங்கள் - காலை 7.30 தொடக்கம் 9.00 மணி வரை
செவ்வாய் - பகல் 3.00 தொடக்கம் 4.30 மணி வரை
புதன் - பகல் 12.00 மணி முதல் 1.30 மணி வரை
வியாழன் - பகல் 1.30 மணி முதல் 3.00 மணி வரை
வெள்ளி - காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரை
சனி - காலை 9.00 மணி முதல் 10.30 மணி வரை

**எம கண்டம்**

ஞாயிறு - பகல் 12.00 மணி தொடக்கம் 1.30 மணி வரை
திங்கள் - காலை 10.30 தொடக்கம் 12.00 மணி வரை
செவ்வாய் - காலை9.00 தொடக்கம் 10.30 மணி வரை
புதன் - காலை7.30 மணி முதல் 9.00 மணி வரை
வியாழன் - காலை6.00 மணி முதல் 7.30 மணி வரை
வெள்ளி - பகல் 3.00 மணி முதல் 4.30 மணி வரை
சனி - பகல் 1.30 மணி முதல் 3.00 மணி வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகு காலத்தே துர்க்கை வழிபாடும் எமகண்டத்தில் இறந்தவர்களை வழிபடுவதும் உத்தம பலன்களைத் தரும்.

திதிகள்

அமாவாசை, பிரதமை, துவிதயை, திருதியை, சதுர்த்தி. பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அ ஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி என்பன திதிகளாகும்.

பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, இவற்றில் திருவிழாக்கள், அரங்கேற்றம், கச்சேரிகள் செய்வது உத்தமம் துவிதியை, ஸப்தமி, துவாதசி இவற்றில் வாகனங்கள் வாங்க விற்க பிரயாணம் செய்வது உத்தமமாகும். திரிதியை, அஷ்டமி, திரயோதசி, கொடி மரம் நடுவது நல்லது. திரிதியை,திரயோதசி,திதியில் சுப காரியங்கள் செய்யலாம். சதுர்த்தி, நவமி, சதுர்தசி, இவற்றில் கனமான. வில்லங்கமான வேலைகளை செய்யலாம். பஞ்சமி, தசமி, பௌர்ணமி திதிகளில் திருமணம், யாத்திரை, யாகம் மற்றும் சுப காரியங்களைச் செய்யலாம். கரி நாட்களில் எந்தச் சுபகாரியங்களும் செய்யக் கூடாது.

நாள் விழிப்பு

புதன், வியாழன், வெள்ளி 2 கண்ணுள்ள நாட்கள் ஞாயிறு, திங்கள், இவை ஒரு கண்ணுள்ள நாட்களாதலால் சிறப்பல்ல. செவ்வாய், சனி குருட்டு நாட்கள் சுப செயல்கள் செய்யக் கூடாது. புதன், வியாழன், வெள்ளி இரு கண்ணுள்ள நாட்கள் சுப காரியங்கள் செய்யலாம்.

மலமாதம்

எந்த மாதத்தில் இரண்டு அமாவாசை அல்லது இரண்டு பௌர்ணமி வருகின்றதோ இது மல மாதமாகும். சுப காரியங்கள் செய்தல் கூடாது.

அக்கினி நட்சத்திரம்

சித்திரை 21ம் திகதி முதல் வைகாசி 14ம் திகதி வரையான காலமாகும் தேவ பிரதிஷ்டை, திருமணம், கிணறு வெட்டல், குளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டல்,விதை விதைத்தல். மரம் நடுதல் போன்றவை இக்காலத்திலே தவிர்கப்படவையாகும்.

ஜென்ம நட்சத்திரத்தில் பட்டாபிஷேகம்,வித்தைகள் ஆரம்பித்தல், வேள்வி, யாகங்கள், சொத்து வாங்கல் ஆகியவற்றைச் செய்யலாம். விவாகம். உடலுறவுகள், சீமந்தம்,எண்ணை தேய்த்து குளித்தல், போன்றவை செய்யக் கூடாது. பெண்களுக்கு ஜென்ம நட்சத்திரத்தில் திரமணம் செய்யலாம் ஆனால் ஜென்ம வாரத்தில் அமையக் கூடாது.

திருமணம் செய்து ஆறு மாதம் வரை பூநூல் சடங்கு செய்வதொ தீர்த்த யாத்திரை செல்வதோ, புது மனை புகுதலோ கூடாது. உஷத் காலத்தில் திதி தோஷமும்,அபிஜித் காலத்தில் அதாவது 12 ½ நாழிகைக்கு மேல் 1 நாழிகைக்குள் நட்சத்திர தோஷமும் அஸ்தமன காலத்தில் லக்ன தோஷமும் இரவில் வார தோஷமும் கிடையாது.

**பஞ்ச பட்சிகள்**

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு பட்சியுண்டு.

அச்சுவினி, பரணி, கார்த்திகை,
ரோகினி, மிருகசீரிடம் - வல்லூறு
திருவாதிரை, புனர்பூசம், பூசம்,
ஆயில்யம், மகம், பூரம் - ஆந்தை
உத்தரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், - காகம்
அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் - கோழி
திருவோணம், அவிட்டம், சதயம்,
பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி - மயில்

இந்த நாட்களில் அவரவருடைய படுபட்சிகள் செயலிழந்து விடுவதனால் இந் நாட்களில் எவ்வித சுப காரியங்களும் பிரயாணங்களும் புதிய முயற்சிகளும் செய்யக் கூடாது.

வல்லூறு - வளர் பிறையில் வியாழன் சனி
தேய் பிறையில் செவ்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆந்தை - வளர் பிறையில் ஞாயிறு, வெள்ளி
தேய் பிறையில் திங்கள்
கோழி - வளர் பிறையில் செவ்வாய்
தேய் பிறையில் வியாழன், சனி
மயில் - வளர் பிறையில் புதன்
தேய் பிறையில் புதன் வெள்ளி

**சகுனங்கள்**

சுப சகுனங்களாக கன்னி, பசு, ரத்தினம், மலர், தயிர், யானை, குதிரை, பல அந்தணர்கள், கொடி, எரிகின்ற தீபம், அக்கினி, பூர்ணகும்பம், காளை, தாமரைசந்தனம், தானியங்கள், பிணம், வேசி, வெள்ளை மாலை, அக்ஷதை, எள்ளு, சலவைத்துணி, குழந்தையுடன் உள்ள பெண், கன்றுடன் கூடிய பசு, சங்கு,வாத்திய ஒலி, நெய், பால், இவை எதிரில் வந்தால் உத்தமம். மோர், எண்ணை தேய்த்துக் கொண்டவன், தலைமுடி விரித்துப் போட்டிருப்பவன், சடை முடியடையவன், ஊர் சுற்றுபவன், குயவன்,சிவந்த மலர், ஈரத் துணி, உப்பு, பன்றி, வலக்கால் தடுக்கல், அழுகை, பாம்பு, முயல் போன்றவை அப சகுனங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மனிதனுக்கு உயிர் பிரியும் தறுவாயில் செய்ய வேண்டியது

இறக்கும் தருணம் வந்துவிட்டால் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி பிராமணருக்கு தானம் செய்ய வேண்டும். மரணப்படுக்கையில் ஒருவர் இருந்தால் அவருக்கப் பதிலாக அவருடைய பிள்ளைகளோ அவருக்கு கர்மஞ் செய்பவர்களோ இதைச் செய்யலாம்.

ஒருவனுக்கு உயிர் பிரியும் தறுவாயில் அவனை கட்டிலிலி படுக்க வைக்கக் கூடாது. தரையிலே தர்ப்பை புல் பரப்பி அதிலோ அல்லது கட்டாந் தரையிலோ படுக்க வைக்க வேண்டும். கட்டிலிலே படுத்திருந்து உயிர் போனதால் பரிஷித் மஹாராஜா நரகத்தை அடைந்தார் என்று புராணங்கள் கூறுகின்றது. பிறப்பினம் சரி இறப்பினம் சரி பூமாதேவியின் தொடர்பிருக்க வேண்டும். இறக்கும் தறுவாயில் துளசி, சாளக்கிராமம் போன்ற உத்தம பொருட்களைக் கண்ணில் காட்டவும். புண்ணியம் செய்தவர்க்கு முகத்தின் வழியுள்ள துவாரங்களின் ஊடாகவும்,ஞானிகளுக்கு சிரிசு வெடித்தும், பாவிகளுக்கு மல,ஜல துவாரங்களினூடாகவும் உயிர் பிரியும்.

பிராணன்போன பின்புதலையைத் தெற்கு புறமாக வைத்து படுக்க வைக்க வேண்டும். பெண்கள் தலை விரி கோலத்தில் தெற்கு நோக்கி வணங்கியதன் பின்னரே ஏனைய காரியங்களைச் செய்ய வேண்டும். ஒருவன் இறந்தவுடன் ஒரு ஜாமம் (03 மணிநேரம்) கழிந்த பின்பு உடலை இடம்மயற்றி வைக்க வேண்டும். இரவு ஒன்பது மணிக்கு மேல்தகனம் செய்யக்கூடாது. பூலோகத்திற்கும் ஜெமலோகத்திற்கும் இடையே எண்பத்தாறாயிரம் காதம் தூரம் உள்ளது. விதி முடிந்த ஜீவனை பாசத்தால் கட்டியிழுத்து, காற்றில் உருவமான தேகத்தை அடைத்துக் கொண்டு, யம தூதர்கள் யமதேவனின் முன் நிறுத்தி அவ்வான்மாவின் கணக்கிடப்பட்டு மீண்டும் அந்த ஜீவனை ஒரு நொடியில் கொண்டு வந்து விட்டுவிடுவார்கள். மரணமான ஆன்மாவானது மூன்று நாட்கள் நீரிலும், மூன்று நாட்கள் அக்கினியிலும், மூன்று நாட்கள் ஆகாயத்திலும் ஒரு நாள் தனது வீட்டிலும் ஆவியுருவில் வசிக்கும்.முதல் நாள் 3வது, 5வது, 7வது, 9வது. 11வது நாளன்று நவ சிரார்த்தம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியிலே மூத்தவன் கொள்ளி வைக்க வேண்டும். அவன் இல்லா விட்டால் இருப்பவர்களுள் மூத்தவர் காரியங்கள் செய்யலாம். ஆண் சந்ததியற்றவர்களுக்கு மருமகன் செய்யலாம். சந்ததி அற்றவர்க்கு சகோதரர்கள் செய்யலாம். எவராயினும் ஈரத்துணியுடனே செய்ய வேண்டும். அக்னி சட்டியினை (கொள்ளிகுடத்தினை) முன்னே கொண்டு செல்ல சிதை பின்னே செல்ல வேண்டும். ஏனையோர் இவற்றின் பின் செல்ல வேண்டும். பாடை கட்டியே கொண்டுபோக வேண்டும்.தகனம் செய்யுமிடத்தில் தென்திசை நோக்கி தலை வைத்து காரியம் செய்பவர் கிழக்கு பக்கம் நின்று மேற்கு பக்கம் பார்த்த படியே கொள்ளி வைக்க வேண்டும். இறந்தவர் வீடு எப்போதும் அமைதியாக இருக்க வேண்டும். சத்தங்கள் கூச்சல்கள் இறந்த ஆன்மாவின் நிலைகளை குலைத்துவிடும். செவ்வாய், வியாழன், வெள்ளி, ஆகிய நாட்களில் இறக்கக் கூடாது. அப்படி இறந்தால் அந்த நாளுக்கேற்றது போல் பரிகாரங்கள் செய்யப்பட வேண்டும். சில நட்சத்திரங்களில் இறந்தால் அந்தந்த வீடுகளில் சில காலம் சுப காரியங்கள் செய்யலாகாது.

| | | |
|---|---|---|
| அவிட்டம் | - 3 | மாதம் |
| கார்த்திகை | - | மாதம் |
| ரோகிணி | - 5 | மாதம் |
| சதயம் | - 6 | மாதம் |
| புனர்பூசம் | - 3 | மாதம் |
| மகம் | - 5 | மாதம் |
| பூரட்டாதி | - 6 | மாதம் |
| உத்தரம் | - 3 | மாதம் |
| மிருகசீரிடம் | - 2 | மாதம் |
| உத்தரட்டாதி | - 6 | மாதம் |
| ரேவதி | - 6 | மாதம் |
| சித்திரை | - 2 | மாதம் |
| விசாகம் | - 3 | மாதம் |
| உத்தராடம் | - 3 | மாதம் |

அப்படி ஏதாவது சுப காரியம் செய்ய நேரிட்டால் வெண்கலப் பாத்திரத்தில் நல்லெண்ணை ஊற்றி தானமாக கொடுத்ததன் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம். பெற்ற தாய் தந்தை இறந்தால் 1 வருடம் தீட்டாகும். மனைவி இறந்தால் 3 மாதம் தீட்டாகும். மருமகன் இறந்தால் மாமன் மாமிக்கு தீட்டில்லை. இரவல் கொள்ளி வைப்பதனால் 45 நாட்கள் தீட்டாகும். தாய் தந்தை இறந்தால் ஒரு வருடம் யாத்திரை, நீர் நிலைகளைக் கடப்பது, சிவ விஷ்ணு ஆலயங்களிற்கு போகக் கூடாது. தற்கொலை செய்பவர்களுக்கு தீட்டுத் தர்பணங்கள் கிடையாது. செய்வதாயின் ஆறு மாதங்களின் பின்னரேயாம். கருவில் குழந்தை இறந்துவிட்டால் அது எத்தனைமாதமோ அத்தனை மாதம் தீட்டாகும். இந்தக் காலத்தில் தரையிலே உறங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நயத்தல்

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற வாக்கிற்கிணங்க எமது அன்புத்தெய்வம் சிவஸ்ரீ. இரத்தினசாமிக்குருக்கள் பாலச்சந்திரக்குருக்கள் அவர்களின் பிரிவால் மீளாத்துயரில் மூழ்கியிருந்த வேளை ஓடோடி வந்து எமது துயரை பகிர்ந்து ஆறுதல் கூறி ஆதரவாக இருந்த உற்றார், உறவினர், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் குருமார்கள், நண்பர்கள் இறுதிக் கிரியைகள் சிறப்புற நடைபெறுவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகநூலில் அனுதாபங்களையும் ஆறுதலையும் மொழிந்த எல்லா உள்ளங்களுக்கும், அஞ்சலிப் பதாதைகள், அஞ்சலிப் பிரசுரங்கள் ஊடாக அஞ்சலி செலுத்தியோருக்கும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் பங்கு கொண்டு உதவிய உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள், அனைவருக்கும் இம்மலரினை அழகுற அச்சேற்றித் தந்த "அகரம்" அச்சகத்தாருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலை இதயசுத்தியோடு தெரிவித்து கொள்கின்றோம்.


*குடும்பத்தினர்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதைநீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அதுவும் இங்கிருந்தே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.





**இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாரம்சமுமாகும்**
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

அகரம் பிறின்டேஸ்-024 222 3772
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org